326

குழந்தைகளின் வாரப் பத்திரிகை

அணில்

மலர் 5
இதழ் 3
ஏப்ரல் 21
1950

வெள்ளிதோறும் ★ ஆசிரியர் : வை. கோவிந்தன் ★ அணா ஒன்று

சொன்னபடி கேட்கும் கோழி

கோழி வளர்ப்பைப்பற்றி ஒரு அம்மையார் பிரசங்கம் செய்து கொண்டிருந்தார். கையிலே ஒரு அழகான கோழியையும் வைத்திருந்தார் பிரசங்கம் செய்து கொண்டிருந்தபொழுது "என் கையில் இப்பொழுது இருக்கும் கோழி ஒழுங்காக முட்டையிடும் கோழி" என்றார். சொன்னதுதான்; அந்தக் கோழி அம்மையார் கையிலேயே உடனே ஒரு முட்டை இட்டது.

எரிமலையிலிருந்து எலக்டரிக் கரெண்டு

ஜப்பானை அடுத்த கிருஷூ தீவில் வடமேற்குப் பகுதியில் பூக்கோலா என்னும் ஊரில் உள்ள எலக்ட்ரிக் கம்பெனியார் எரிமலை உஷ்ணத்திலிருந்து எலக்ட்ரிக் கரெண்டு உற்பத்தி செய்யத் திட்டம் போட்டிருக்கிறார்கள். இரண்டு மூன்று வருஷங்களில் திட்டம் வெற்றிபெறும். இதற்கு 12 கோடியே 59 லட்சம் என் செலவாகும்.

உலகத்திலே பெரிய தியேட்டர்

உலகத்திலேயே பெரிய தியேட்டர் ஹாவனாவில் இருக்கிறது. அந்தத் தியேட்டரில் 6750 பேர்கள் இருந்து காட்சி பார்க்கலாம். அந்தத் தியேட்டரில் 1800 கார்கள் நிறுத்த இடம் அமைக்கப் பட்டிருக்கிறது. அந்தத் தியேட்டரைக் கட்டி முடிக்க ஒரு கோடியே பதினைந்து லட்ச ரூபாய்க்குமேல் ஆகியதாம்.

பாலோ பால்

ஒரு ஆழாக்குபால் நமக்குக் கிடைப்பதற்கு 400 ஆழாக்கு ரத்தத்தை பசு தன் மடிக்குக் கொண்டுவர வேண்டியதிருக்கிறதாம்.

இவர்களைப் பார்க்கும் போது பரிதாபமாக இருக்கிறதல்லவா? சரி, 4ம் பக்கத்தில் படியுங்கள்

அ ணி ல்

1950ஆ ஏப்ரல் 21உ வெள்ளிக்கிழமை

தங்கைகளே! தம்பிகளே!!

ரொம்ப சந்தோஷம், ரொம்ப ரொம்ப சந்தோஷம், அணில் வாரப்பத்திரிகையானது பற்றிப் பாராட்டி, ஒரேயடியாக எழுதி விட்டீர்கள். இனி வாரப்பத்திரிகையாகவேதான் வரும்.

நான்காவது எழுத்தறிவுப் போட்டியில் ரொம்பப் பேர் கலந்து கொண்டிருக்கிறீர்கள். அடுத்த வாரம் பரிசு விபரம் வெளியாகும். இந்த இதழிலும் போட்டி 5 வெளியாகியிருக்கிறது. சுலபமான போட்டிதான். கடலோடியின் கதை ஆறுவது பிரயாணம் அடுத்த வாரம் வெளியாகும். இந்த இதழிலே காவேரி—ஒரு அனாதையா? முடிவடைகிறது.

பாட்டி கதைகள் படித்து முடிந்தது. அபாரமான கதைகள். மே மாதம் 5-ந்தேதி இதழில் பரிசு பெற்றவர்களின் பெயர் வெளிவரும். பரிசு பெற்ற கதைகள் அணிலில் வெளிவரும். அணில் சங்க அங்கத்தினர் பெயரும், அணில் சங்க மனுவும், அடுத்த இதழில் வெளியிடுகிறேன். இந்த இதழில் இடம் இல்லை.

பள்ளிக்கூடம் இந்த வாரத்திலிருந்து விடுமுறை விடுகிறார்கள். நீங்கள் என்ன செய்யப்போகிறீர்கள்? உங்களுக்கு ஒரு வேலை தரப்போகிறேன். சரி, என்ன அவசரம். அடுத்த வாரம் சொல்லலாமல்லவா?

எழுத்தறிவு இலவசப் பரிசு போட்டி-5

பரிசு ரூ. 25.

போட்டி முடிவு: 15-5-50.

விடைக் குறிப்பு:

விடைகளை இதே கூப்பனில்தான் எழுதி அனுப்ப வேண்டும். கவரில் "எழுத்தறிவுப் பரிசுப் போட்டி நெ. 5" என்று குறிப்பிட்டு "அணில், சக்தி காரியாலயம், ராயப்பேட்டை, சென்னை—14" என்று விலாசம் எழுதி அனுப்புக. விடைகளை எழுதி 15–5–50-க்குள் இங்கு கிடைக்கும்படி அனுப்பிவிட வேண்டும்.

பரிசுக் கூபன்

1	சே			
2	சே			
3	சே			
4	சே			
5	சே			

பெயர்.............................

ஊர், தபாலாபீஸ்.......................

....

ஜில்லா...............................

இடமிருந்து வலம்

1. கூட்டாளிக்கு மற்றொரு பெயர்
2. பிள்ளையார் கோவிலில் மாலையில் இதை அடித்து அங்கு ஊதுவார்கள்
3. நீ அந்த இதைச் சேர்ந்தவனா என்று கேட்பார்கள்
4. அண்ணனுக்கு மற்றொரு பெயர்
5. ஆடை நெய்பவனுக்கு மற்றொரு பெயர்.

மகாகவி பாரதியாரின் கவிதைகளைப் படித்திருப்பீர்கள், கதைகளைப் படித்திருப்பீர்கள், கட்டுரைகளைப் படித்திருப்பீர்கள். அவர் யார்? எப்படிப்பட்ட மனிதர்? அவர் என்ன செய்தார்? ஏன் செய்தார்?' என்ற விஷயங்களை நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டுமல்லவா? அவருடைய சரித்திரமே ஒரு பாரதக் கதைபோல இருக்கும். வேடிக்கையாக இருக்கும், விசித்திரமாக இருக்கும். புரட்சியாக இருக்கும். போலீஸ் காரர்கள் அவருடைய கதையிலே வருவார்கள், ஏமாறுவார்கள். புதுச்சேரியிலே அடைக்கலம் புகுந்தபோது அவர் பட்ட கஷ்டங்கள் கடலோடி நாலாவது பிரயாணத்தின் போது பட்ட கஷ்டங்களுக்குமேல். கடலோடி கதையைக் காட்டிலும் பாரதியாரின் கதை ஆச்சரியமாக இருக்கும். திடுக்கிடும் சம்பவங்கள். அப்பப்பா திடீரென்று தூக்கி வாரிப்போடுகிறது. விகடத் துணுக்குகளைப் படித்துப் படித்துச் சிரிக்கிறீர்களே, பாரதியார் கதையிலே பார்க்க வேணுமே. சிரித்துச் சிரித்து வயிறு வெடித்துப் போகும்.

பாரதியாரின் கதையைச் சொல்லியவர் ஒரு தாத்தா. தாத்தாவின் பெயர் வ. ரா.

இது நிஜக் கதை. லீவ் வந்துவிட்டது. நல்ல புஸ்தகங்களைப் படிக்க வேண்டாமா? அப்பாவிடம் கேட்டு, மகாகவி பாரதியார் புத்தகத்திற்கு விலை ரூ. 1-8-0 யும், தபால் செலவுக்கு அணா 4-ம், மொத்தம் ரூ. 1–12 வாங்கி மணியார்டரில் அனுப்புங்கள். உடனே மகா கவி பாரதியார் உங்கள் கையிலே வந்து ஜாம் ஜாம் என்று குதிப்பார்.

சக்தி காரியாலயம், சென்னை-14

விடுகதை

1. வெய்யில் காலத்தில் அவரைப் பார்க்கலாம். கொஞ்சம் கொஞ்சமாகச் சிறுத்துக்கொண்டே வருவார். கடைசியில் காணமல் போய் விடுவார். அவர் யார்?

2. அவருக்கு பற்கள் அநேகம். கடிக்க மாட்டார். அவர் யார்?

3. நிறையத் துவாரங்கள் இருக்கும். தண்ணீரை வெளியே போக விடாது. அது என்ன?

1. ஐஸ், 2. சீப்பு, 3. கடற்பஞ்சு.

தெரியுமா?

எரிமலை வீர சாவர்க்கர் எழுதிய எரிமலை அல்லது முதலாவது இந்திய சுதந்திர யுத்தம் என்னும் புத்தகம் முதலாவதாக மராத்தி பாஷையில் எழுதப் பெற்றது. மராத்தி பாஷையில் ரகசியமாக அச்சிட முடியாததால் ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தார்கள். இங்கிலாந்திலும், பிரான்சிலும் அச்சிட எவ்வளவோ முயற்சித்தார்கள். அரசாங்கத்திற்குப் பயந்து பிரஸ்காரர்கள் அச்சிட முடியாதென்று சொல்லி விட்டார்கள். பிறகு ஹாலந்தில் அச்சிடப் பெற்றது.

முந்திரிப் பருப்பு முதன் முதலாக இந்தியா மேற்குக் கரைக்கு முந்திரி மரங்களை போர்ச்சுக்கீசிய கம்மாண்டர் காப்ரால் என்பவர் தென் அமெரிக்காவிலிருந்து கொண்டு வந்தார்.

பம்பாய்த் துறைமுகம் 74 சதுர மைல் அளவுக்கு விரிந்திருக்கிறது.

சித்தூர் வெற்றித் தூணில் பிரம்மா, விஷ்ணு, மஹேச்வரர் பெயர்களுடன் அல்லாவின் பெயரும் அராபி எழுத்தில் எழுதப்பெற்றிருக்கிறது.

கால் நடை. கால்டுவெல் பாதிரியார் உதக மண்டலத்திலிருந்து திருநெல்வேலி வரை நடந்தே வந்தார். சுமார் முந்நூறு மைல்களுக்கு மேல் இருக்கும்.

மோனேஸைட்டில் தான் தோரியம் இருக்கிறது. அணுசக்தி உண்டாக்குவதற்கு வேண்டிய பொருள்களில் முக்கியமானது தோரியம். முதன்முதலாக 1909-ம் வருஷத்தில் மோனேஸைட் திருவாங்கூரில் கண்டு பிடிக்கப்பெற்றது,

வெற்றிலைக்கு ஆங்கிலத்திலும் வெற்றிலை தான். ஆங்கிலத்தில் 'பீட்டல்' என்று தான் இன்னும் சொல்கிறார்கள். போர்ச்சுகீசியர் மலையாளத்திற்கு வந்த போது வெத்திலையை வெத்திலே என்றார்கள். பிறகு வெத்திலே பெட்லே ஆச்சு. பெட்லேயை ஆங்கிலேயர் பீட்டில் என்று சொல்கிறார்கள்.

123456789 இந்த எழுத்துக்களை அராபி எழுத்து என்று சொல்வார்கள். இவைகள் அராபி எழுத்துக்கள் இல்லை. இந்தியாவிலிருந்து தெரிந்துகொண்டார்கள் அராபியர். அராபிக்காரரிடமிருந்து ஐரோப்பியர்கள் அறிந்தார்கள். ஆதலால் அராபி எழுத்து என்கிறார்கள்.

மாமிச உணவு உட்கொள்ளாத ... உணவுக் காரர்கள், வேறு எந்த நாட்டையும் விட இந்தியாவிலேதான் அதிகம். கோடிக் கணக்கில் இருக்கிறார்கள்.

குழந்தை எழுத்தாளர் சங்கம்

●

விக்ருதி வருடப் பிறப்பன்று —13. 4. 1950ல்-மாலை 5 மணிக்கு குழந்தைப் பதிப்பகக் கட்டிடத்தில் — **குழந்தை எழுத்தாளர் சங்கம்** — என்ற பெயரில் ஒரு சங்கம் ஆரம்பிக்கப்பெற்றது. அதற்கு அணில், அம்பி, கல்கண்டு, நவயுவன், ஜில் ஜில் முதலிய பத்திரிகை ஆசிரியர்களும், குழந்தைகளுக்காக எழுதும் இன்னும் பலரும் வந்திருந்தனர்.

சிற்றுண்டிக்குப் பிறகு நவயுவன், ஆசிரியர் நவீனன் அவர்கள் தலைமையில் கூட்டம் ஆரம்பமானது. குழந்தைகளுக்கு எழுத்துமூலம் தொண்டு செய்வதையே முக்கிய நோக்கமாகக் கொண்டு, அவர்களின் அறிவு வளர்ச்சிக்குப் பாடுபடவேண்டு மென்பதும், குழந்தைகளுக்காக எழுதுவோரிடையே ஐக்கிய உணர்ச்சியை வளர்க்க வேண்டும் என்பதுமே இச்சங்கத்தின் முக்கிய நோக்கங்கள்.

இச்சங்கத்தின் நிர்வாகிகளாக கீழ்க்கண்டவர்கள் தேர்த்தெடுக்கப் பெற்றிருக்கிறார்கள் :—

தலைவர்—ஸ்ரீ வை. கோவிந்தன், உப தலைவர்—ஸ்ரீ தமிழ்வாணன், காரியதரிசிகள்—ஸ்ரீ அழ. வள்ளியப்பா, ஏ. திருநாவுக்கரசு, நிர்வாக அங்கத்தினர்கள்—ஸ்ரீ கெ. சி. தெய்வசிகாமணி, ஸ்ரீ நவீனன், ஸ்ரீ ரா. கி. ரங்கராஜன், ஸ்ரீ கே. கண்ணுச்சாமி, பொக்கிஷதார்—ஜி. ரத்னம்.

குழந்தைகளுக்காக எழுதுவோர் ஒவ்வொருவரும் இச்சங்கத்தில் அங்கத்தினராகி ஆதரவளிக்க வேண்டுமென இச்சங்கம் விருமபுகிறது. சங்கத்தில் சேர விரும்புவோர் — காரியதரிசி, குழந்தை எழுத்தாளர் சங்கம், 4, ரட்லண்ட் கேட் காலனி, சென்னை—6. என்ற விலாசத்துக்கு எழுதலாம்.

வலது பக்கம் இருதயம்

உங்களுக்கு, எனக்கு, மற்றவர்களுக்கெல்லாம் இருதயம் இடது பக்கத்தில் இருக்கிறதல்லவா? மோகா என்னும் ஊரில் ஒரு சிறு பையன் இருக்கிறான். அவனுடைய தகப்பனார் ஒரு தோல் வியாபாரி. அவனுக்கு எட்டு வயசாகிறது. அவன் ஆஸ்த்மா நோயாளி மாதிரி மூச்சு விடுகிறான். நாக்கு நீலம் பூத்திருக்கிறது. விரல் முனைகளில் ஏதோ திரவம் ஊறிக்கொண்டே இருக்கிறது. நாளுக்கு நாள் பலம் குறைந்து வருகிறது. ஆதலால் அவனால் நடக்க முடிவதில்லை.

இத்தனைக்கும் காரணம் என்ன தெரியுமா? அவனுக்கு வலது பக்கத்தில் இருதயம் இருக்கிறது.

வைத்திய நிபுணர்கள் பரிசோதனை செய்தார்கள் இவனை. இவனைச் சொஸ்தப் படுத்த எங்களால் முடியாது. ருஷ்யா, அமெரிக்கா தேசங்களில்தான் சிகிச்சை செய்ய சாத்தியப்படும் என்று முடிவு கட்டி விட்டார்கள்.

நான்... ...பேசுகிறேன்...

அமெரிக்கக் குழந்தைகளுக்காக நேருஜி அசோகன், சாந்தி என்ற யானைக் குட்டிகளை அனுப்பியது ஞாபகம் இருக்கிறதா? அவை இரண்டும் எப்ரல் 9-ந் தேதி நியூயார்க் துறைமுகத்தை அடைந்தது. கப்பலை விட்டு இறங்கியதும் கூண்டிலிருந்த யானைகளை வெளியே விட்டார்கள். வெளியே விட்டதும் வெல்லம், அரிசியை குஷியாகச் சாப்பிட்டன. சாப்பிட்டுக் கொண்டிருக்கும் பொழுது போட்டோக்காரர்களும், செய்திப் படக்காரர்களும், சினிமாப் படக்காரர்களும் யானைக் குட்டிகளைச் சூழ்ந்து கொண்டு படம் பிடித்தனர்.

இந்த உலகத்திலே பலவேறு இடங்களில் 60 கோடி குழந்தைகள் பரிதாபகரமான நிலைமையில் இருக்கின்றன. அவர்களுக்கு உடல் வளர சத்துள்ள உணவும், அறிவு வளர பயனுடைய கல்வியும், உடலில் நோய் வராமல் காப்பாற்ற வைத்திய வசதியும் இல்லாமல் தவிக்கின்றனர். இந்த நிலைமையைப் போக்க ஐக்கிய நாடுகளின் சமூகக் கமிஷனிடம் இந்தியப் பிரதிநிதிகளும் பிரெஞ்சுப் பிரதி நிதிகளும், மற்ற தேசப் பிரதிகள் சில யோசனைகளைக் கூறியிருக்கின்றனர்...

உலகத்தைக் கலகமாக்கப் பாடுபடும் அமெரிக்கா வெகு சீக்கிரத்தில் மற்றொரு அணுகுண்டுப் பரிட்சை நடக்கப் போகிறது. அதே சமயத்தில் ஜலவாயு குண்டையும் பரிட்சித்துப் பார்க்கப் போகிறதாம். அதற்காக ஜலவாயு குண்டும் சீக்கிரம் தயாரிக்க ஏற்பாடு நடை பெறுகிறது.

இந்தக்காலத்திலே நம் கண் முன்னே வாழ்ந்த பகவான் ரமண மகரிஷி ஏப்ரல் மாதம் 14-ந் தேதியன்று உயிர் நீத்தார்.

அவனும் தப்பு

உபாத்தியாயர்: ராமு ஏண்டா கணக்குத் தப்பாயிருக்கிறது.

ராமு: சோமுவுடைய கணக்கும் தப்பாயிருக்கும் சார். அதனால் தான் என் கணக்கும் தப்பு சார். —வரதராஜலு

காவேரி—ஒரு அனாதையா?

மங்களம்

[முன் கதைச் சுருக்கம்:—பர்மாவிலே ரங்கூன் நகரத்தில் ஜப்பான்காரன் குண்டு போட்டான்; ரங்கூன் நகரத்தில் இருந்த உதவி அக்கௌண்டெண் ஜெனரல் அர்த்தநாரி அய்யர், சீதாலெட்சுமி அம்மாள் மகள் காவேரி மூவரும் பல கஷ்டங்களுடன் தரை மார்க்கமாக மலைப்பாதையில் நடந்து வருகிறார்கள்.]

(முன் தொடர்ச்சி)

பள்ளத்தாக்கில் இறங்கி வந்தால், சிறு பள்ளங்களில் தண்ணீர் தேங்கிக் கிடக்கும். அந்தத் தண்ணீரை தாகத்துக்காக யாராவது குடித்தால் யமலோகம்தான். குடித்தவர்கள் செத்துப் பிணமாய்க் கிடக்கிறார்கள். பிரயாணிகள் பலரிடம் ஆகாரம் இல்லை. குடிக்கத்தண்ணீரும், உண்ண உணவுமில்லாததால் பலரால் நடக்க முடியவில்லை. பட்டினியோடு பலர் வழியிலே மடிந்தனர். கலையுவாவிலிருந்து சிலர் தகரத்திலே தண்ணீர் கொண்டு வந்தார்கள். அவர்கள் மட்டும் கொஞ்சம் கொஞ்சமாகத் தண்ணீர் குடித்துக்கொண்டும் கையில் உள்ள உணவுப்பொருளை அங்கங்கே உட்கார்ந்து சமையல் செய்து சாப்பிட்டுக் கொண்டும் நடந்தார்கள். வழி எல்லாம் பிணக்காடு. பிண நாற்றம் மூக்கைத் துளைக்கிறது. அதற்கு நடுவிலேதான் நடந்து வருகிறார்கள் அர்த்தநாரி அய்யர் குடும்பம்! இவர்களுக்கு நடந்து பழக்கமில்லை. தள்ளாடித் தள்ளாடித் தம்முவுக்கு வந்து சேர்ந்தார்கள். தம்முவிலிருந்து 12 மைல் ஒரு பெரிய காட்டின் வழியாக வரவேணும். அந்தக் காட்டிலே துஷ்டமிருகங்கள் அதிகம். அந்தக் காட்டின் வழியாக வந்து கொண்டிருக்கிறார்கள். ஒரு இடத்திலே உட்கார்ந்து சமையல் செய்கிறார்கள் எல்லோரும். அர்த்தநாரி அய்யர் குடும்பத்தாரும் சமையல் செய்கிறார்கள். சமையல் ஆவதற்குள் அர்த்தநாரி அய்யருக்கு இருபது தடவை வயற்றாலே போயிற்று. பிறகு நடக்க முடியுமா? சற்று நேரத்தில் உயிர் போய்விட்டது. சீதாலட்சுமி அம்மாளுப், காவேரியும் குய்யோ முறையோ என்று அலறினார்கள். கூட வந்தவர்கள் 'அலறி என்ன பயன்? புறப்படுங்கள்' என்றார்கள். புறப்படும்வழியாயில்லை. இவர்களை விட்டு விட்டுப் புறப்பட்டு விட்டார்கள் மற்றவர்கள். சற்று நேரத்திலே பின்னால் வந்துகொண்டிருந்த பிரயாணிகள் வந்துவிட்டார்கள். அவர்களுடனே தாயும் மகளும் நடந்தார்கள், கொஞ்சதூரம் நடந்திருப்பார்கள். சீதாலட்சுமி அம்மாளால் நடக்க முடியவில்லை. தள்ளாடித் தள்ளாடி நடந்தாள். காவேரி மரங்களையும், காட்டுச் செடிகளையும், பறவைகளையும் பார்த்துக் கொண்டே நடந்து வருகிறார்கள். அம்மாவால் நடக்க முடியவில்லை. மயக்கம்போட்டுக் கீழே விழுந்தாள். உயிர் போய் விட்டது; காவேரி மட்டும்தான். காவேரி ஒரு அனாதை. அனாதை அழுகிறது. அந்தக் கூட்டத்தில் வந்த ஒருவருக்கு காவேரியிடம் அன்பு பிறந்தது. தோளிலே தூக்கிக் கொண்டார். அவர் பெயர் கருப்பையா தேவர். அவர் ஒரு விவசாயி. கடைசியாகக் கூட்டம் அஸ்ஸாமை அடைந்து விட்டது. பிறந்த பொன்னாடு அல்லவா? அஸ்ஸாம். அஸ்ஸாமிலே எல்லோருக்கும் வசதி கிடைத்தது. கல்கத்தா வந்து சேர்ந்தார்கள் கல்கத்தாவிலே காவேரியை கருப்பையா தேவர் கவர்மெண்டாரிடம் ஒப்பித்தார். காவேரி தமிழச்சியதால் காவேரியை சென்னைக்கு அனுப்பி வைத்[illegible]ர்கள். சென்னைக்கு

வந்துவிட்டாள் காவேரி. காவேரி, சின்ன வயசிலே ரெங்கூனுக்குப் போய் விட்டதால் சொந்தக்காரர் யாரையும் அவளுக்குத் தெரியவில்லை. காவேரி அனாதையாகி விட்டாள். சென்னை அரசாங்கம் காவேரியை பெண்கள் அனாதை நிலையத்தில் சேர்த்து விட்டார்கள். அனாதை நிலயப் பள்ளியிலேயே படிக்கிறாள்.

காவேரி அழகான பெண். சுறுசுறுப்பாக இருப்பாள். நன்றாகப் படிப்பாள். ஒவ்வொரு வகுப்பிலும் அவளே முதலாவதாகத் தேறுவாள். அவளுக்குப் பாட்டு கற்றுக் கொடுத்தார்கள், நடனம் கற்றுக் கொடுத்தார்கள், தையல் வேலையும் கற்றுக் கொடுத்தார்கள். ரொம்பக் கெட்டிக்காரியாகி விட்டாள். அனாதை நிலயத்தைப் பார்க்கவரும் அத்தனை பேரும் காவேரியைப் பாராட்டாமல் போவதில்லை. இப்பொழுது அவளுக்கு வயது 14. எஸ். எஸ். எல். ஸி படிக்கிறாள்.

1949-ஆ ஏப்ரல் மாதம் 12-ந்தேதி அனாதை நிலயத்தின் ஆண்டுவிழா. ஹைகோர்ட்டு ஜட்ஜ் கனம் ராமனாதய்யர் தலைமை வகிக்கிறார். அவருடைய மனைவி பார்வதி அம்மாள் பிள்ளைகளுக்கு பரிசு வழங்குகிறார்கள்.

மேளதாளங்களுடன் ஆண்டுவிழா ஆரம்பமாகிறது. ஒரே கூட்டம். அனாதை நிலயம் பிள்ளைகள் நிலயத்தை ஒரு கலைக் கூடமாகச் செய்திருக்கிறார்கள். தலைவர், பரிசளிப்பவர், அனாதை நிலயத் தலைவர்—மேடையில் வீற்றிருக்கின்றனர். காவேரி கடவுள் வணக்கம் பாடினாள். அனாதை நிலயத் தலைவர் சரஸ்வதி அம்மாள் வரவேற்புப் பிரசங்கம் செய்தார். பிறகு குழந்தைகளின் விளையாட்டு வேடிக்கை, நாட்டியம், கேளிக்கைகள் நடந்தன. அத்தனை கேளிக்கைகளிலும் காவேரி தம் கலந்து கொண்டாள். காவேரி தான் அபாரமாக நடித்தாள். அவளேதான் முதல் பரிசு அத்தனையும் அடைந்தாள். தலைமை வகித்த ஜட்ஜ் ராமனாதய்யர் காவேரியைக் கவனித்துக்கொண்டே இருந்தார். யோசனையில் ஆழ்ந்தார். பிறகு மெதுவாக "இந்தப் பெண் எங்கிருந்து வந்தது"? என்று சரஸ்வதி அம்மாளிடம் கேட்டார். சரஸ்வதி அம்மாள் "இந்தப் பெண் ரங்கூன் அகதி" என்றார்கள். கேட்டதும் மறுபடியும் ஒரே யோசனையில் ஆழ்ந்து விட்டார் ஜட்ஜ். கூட்டம் முடிந்தது. சரஸ்வதி அம்மாள் காவேரியைக் கூப்பிட்டார்கள். ஜட்ஜும் பக்கத்திலே நிற்கிறார். காவேரி வந்தாள். காவேரி உன் அப்பா அம்மா பேர் தெரியுமா?' என்றாள் சரஸ்வதி அம்மாள். தெரியுமே அப்பா பெயர் அர்த்தநாரி அய்யர், அம்மா பெயர் சீதாலட்சுமி அம்மாள் என்றாள்.

சொன்னதுதான். ஜட்ஜ் மயக்கம் போட்டு விழுந்தார். கூட்டத்துக்குவந்த டாக்டர் பார்த்தார். சற்று நேரத்தில் எழுந்தார் ஜட்ஜ். 'என் தங்கைமகளா ஒரு அனாதை. 'அப்பா, அம்மா, மகள் மூவரும் செத்து விட்டார்கள்' என்றல்லவோ எண்ணியிருந்தேன் ஆண்டவன் அருளால் இந்தக் குழந்தையாவது தப்பித்ததே என்றார்.

அனாதை நிலய ஆசிரியர்கள், குழந்தைகள், கூட்டத்திற்கு வந்தவர்கள் எல்லோரும் ஆச்சரியம் அடைந்தனர்.

அன்று மாலையே காவேரி மாமா வீட்டிற்கு வந்து விட்டாள். தாயைப் பெற்ற பாட்டியையும் பார்த்து விட்டாள் பேத்தியைப் பார்த்த பாட்டி, மகளை நினைத்துக்கண்ணீர் விட்டாள்.

அடுத்தநாள் அனாதை நிலயத்துக்கு கடிதம் ஒன்று கிடைத்தது. கனம் ஜட்ஜ் ராமனாதய்யரின் கடிதம்தான் அது.

அந்தக் கடிதத்திலே "அனாதை நிலயத் தலைவர் அவர்களுக்கு, என் தங்கை மகள் காவேரியை இத்தனை நாள் வைத்துக் காப்பாற்றியதற்கு நன்றி. இத்துடன் ரூ 5000க்கு செக் வருகிறது. அதைக்கொண்டு என்னுடைய தங்கை சீதாலட்சுமியின் ஞாபகார்த்தமாக ஒரு நூல் நிலயம் ஏற்படுத்த வேண்டுகிறேன்' என்று எழுதியிருந்தது. முற்றும்

உங்களுக்குப் புத்தகங்கள்

அணில் அண்ணன் சொல்லிய
ட்ரிங் ட்ரிங், புஷ்கோட்,
முடியாது, மூன்று கேள்விகள்

லக்ஷ்மி சொல்லிய
அதிர்ஷ்ட தேவதை

ஈச்வரன் சொல்லிய
சந்திர வளையம்

குகப்ரியை சொல்லிய
கிளிக் கோவில்

பாலசுப்ரமணியன் சொல்லிய
மல் கோவா

திருமயம் நடராஜன் சொல்லிய
புலிக்குட்டி வீரன்

ஒவ்வொரு புத்தகமும் ஓரணா. தபால் செலவு ஓரணா. ஒன்பது புத்தகமும் தருவிப்பவர்களுக்கு பத்தணா. பத்தணா தபால் தலை அனுப்பிப் பெற்றுக் கொள்ளலாம்.

சக்தி காரியாலயம், சென்னை-14

விநோதம்

நேரு சொன்ன யானைக் கதை

ஜப்பானுக்கும் அமெரிக்காவுக்கும் நேருஜி யானைகள் அனுப்பித்தார். ஆதலால் அந்ததேசக் குழந்தைகள் நேருவின் மருமகப் பிள்ளைகளாகி விட்டனர். இன்னும் இரண்டு மூன்று நாடுகளில் இருந்தும் யானை அனுப்பும்படி நேருஜிக்குக் கடிதம் வந்திருக்கிறது.

இந்தியாவிலிருந்து வெளிநாட்டுக் குழந்தைகளுக்கு யானை அனுப்புவது இதுதான் முதல் தடவை அல்ல. இதற்கு முன்னும் அனுப்பபட்டிருக்கிறது.

'சமீபத்தில் மாஸ்கோவில் உள்ள சர்வகலாசாலையைக் காண்பிப்பதற்காக இந்திய ஸ்தானிகர் சர்வபள்ளி ராதா கிருஷ்ணன் அவர்களை அழைத்து போனார்கள். ருஷ்யாவிலே முதல் முதலில் அச்சான செய்திப் பத்திரிகை ஒன்றை அவருக்குக் காண்பித்தார்களாம். 1703 ஆ ஜனவரி மாதம் 2-ம் தேதியன்று வெளி வந்த பத்திரிகை அது. அந்தப் பத்திரிகையில் இந்தியாவைப் பற்றி ஒரு செய்தி வெளியாகி இருக்கிறதாம். ருஷ்யச் சக்கிரவர்த்திக்கு இந்தியச் சக்கிரவர்த்தி அனுப்பிய பரிசுகளின் விபரந்தான் அந்தச் செய்தி. அப்போது இந்தியச் சக்கிரவர்த்தி ஔரங்கசீப், ருஷிய சக்கிரவர்த்தி பீடர் மகாராஜா. அந்தப் பரிசுகளிலே ஒன்று யானை.

குரங்குக் கை நல்ல பாம்பு

குரங்குக்கைப் பூமாலை என்ற பழமொழி உங்களுக்குத் தெரியும். பூமாலை மட்டும் அல்ல பாம்புக்கும் அதே கதி தான்.

காசியிலே ஒரு குரங்கு மூடியிருந்த மண் பானையை திருடிக் கொண்டு ஓடி மர உச்சிக்குக்குப் போய் விட்டது. பானையிலே பணியாரம் இருக்குமென்று எண்ணித்தான் கொண்டு போயிற்று. பானையைத் திறந்தது. பாம்பு சீறிக் கொண்டு கிளம்பியது. மரத்தின் கீழே நின்று கொண்டிருந்த ஜனங்கள் 'காய்' 'மூய்' என்று சத்தம் போட்டனர். குரங்கு வேறொரு கிளைக்கு 'ஜம்ப்' பண்ணியது. ஆனால் பாம்பை மட்டும் விடவில்லை. குரங்கும் பாம்பும் ஒரு மணி நேரம் போராடின. கீழே நின்று கொண்டிருந்த கூட்டம் விளையாட்டை வேடிக்கை பார்த்தனர். கடைசியாக குரங்கு கையில் அகப்பட்ட பூமாலை போல் பாம்பும் செத்து ஒழிந்தது.

இமயமலையில் எலக்ட்ரிக் விளக்கு

இமய மலையிலே பத்ரி நாதர் கோயில் இருப்பது உங்களுக்குத் தெரியும். அது ஒரு புண்ணிய ஸ்தலம். அங்கே அடுத்த மாதம், எலக்ட்ரிக் விளக்குப் பிரகாசிக்கப் போகிறது. இமயமலையில் உள்ள கோயில்களில் இந்தக் கோயிலில் தான் முதன் முதலாக எலக்ட்ரிக் விளக்குப் போடப்போகிறார்கள்.

அம்பியின் அதிர்ஷ்டம்

நடனம்

சோமு எட்டாவது வகுப்பு மாணவன். பரம சாது. ஏழைப் பையன். விஷமம் செய்யமாட்டான். பொய் சொல்லமாட்டான். அவனை "அம்பி" என்றும் கூப்பிடுவார்கள். உபாத்தியாயர்கள் கூட அம்பியிடம் ரொம்பப் பிரியம்.

தியாகராயநகர் ஹைஸ்கூலில் படித்து வந்தான். ஒருநாள் மாலை ஐந்து மணி இருக்கும். பள்ளிக்கூடம் விட்டதும், அம்பி சோமுவும் அவன் கூட்டாளிகள் மூவரும் பாண்டி பஜார் வழியாய் வீட்டுக்குப் போய்க் கொண்டிருந்தார்கள். கொஞ்சதூரம் போனார்கள். பிளாட்பாரத்தில் போய்க் கொண்டிருந்தார்கள். ரோடின் கரையோரச் சரிவில் ஒரு சாக்கடை இருந்தது. அதில் ஏதோ ஒரு சாமான் கிடந்தது. அதை ஓடிப் போய்ப் பார்த்தார்கள். அது, ஒரு இரும்புப் படிக்கல். அதில் "8-வீசை" என்று எழுதியிருந்தது. அதை எளிதாய்த் தூக்குவதற்கு ஒரு வளையம் போட்டிருந்தது.

"டேய் அம்பி! இந்தத் தூக்குக் குண்டு யாருடையதாய் இருக்கும்? நமக்கு, கனம் தூக்கி தேகப் பயிற்சி செய்வதற்கு நல்ல சாமான் கிடைத்ததடா! இதைத் தூக்கி ஸ்கூல் காம்பவுண்டில் போட்டு வைப்போம், நாளைக்கு விளையாடுவோம்'' என்றான் பரமன். எல்லாரும் "அப்படியே செய்வோமடா'' என்றார்கள். ஆனால் சோமு மாத்திரம் பதில் சொல்லவில்லை. சும்மா நின்றான். பிறகு "இந்த இரும்புக் குண்டு, பஜாரில் காய்கறி விற்கும் கன்னியப்பனுடையதாய் இருந்தாலும் இருக்கும். அவன் உருளைக்கிழங்கு வியாபாரி. கொஞ்ச நேரத்துக்கு முன்னால் இந்தப் பக்கம், "உருளைக்கிழங்கு வேணுமா, உருளைக் கிழங்கு'' என்று கூறிக் கொண்டு போனான். அவன் வண்டியிலிருந்து இந்தப் படிக்கல் விழுந்திருக்கலாம். வாங்கடா! நாம் எல்லாருமா இந்தப் படிக்கல்லை தூக்கிக் கொண்டு போய், அவனிடம் கொடுத்து விட்டு வருவோம். நமக்குச் சொந்தமில்லாத சாமானை நாம் வைத்துக் கொள்ளக் கூடாது'' என்றான் அம்பி. யாரும் அம்பியின் பேச்சைக் கேட்கவில்லை. கண்டெடுத்த சொத்து, நம்மதுதாண்டா'' என்றான் பாலன்.

அம்பிக்கு பாலன் சொல்லியது பிடிக்கவில்லை. "டேய் பாலு! நீ சொல்வது தவறு. இதை உடையவரிடம் கொடுக்க வேண்டும். என் அம்மா கூட அப்படித்தான் சொன்னாள். வாங்கடா! இதைக் கன்னியப்பனிடம் கொடுத்து விட்டு வருவோம்'' என்றான்.

"அடே! இந்தச் சனியனை அதுவும் இவ்வளவு கனத்தையா, கன்னியப்பனிடம் கஷ்டப்பட்டு சுமந்து போய்க் கொடுக்க வேண்டும்? எங்களால் முடியாதப்பா'' என்றனர் கூட்டாளிகள். அப்படியானால் இதை என் தோளில் தூக்கி விடுங்கள். நான் கொடுத்துவிட்டு வருகிறேன்'' என்றான், சோமு. முடியாதென்று எல்லாரும் ஓடி விட்டனர்.



சோமு, அந்த ஒரு மணங்கு எடையுள்ள படிக்கல்லை, முக்கியடித்து, நகர்த்தி, தோளில் தூக்கிக் கொண்டான். தள்ளாடித் தடுமாறி, கொஞ்சங் கொஞ்சமாய், அடிமேல் அடிவைத்து, நடந்தான். பாரம் தாங்க முடியவில்லை. ஒரே கனம்; பளு. என்ன செய்வான். பாவம். "ஏண்டா இதைப் பார்த்தோம்'' என்று கூட நினைத்தான். ஆடி அசைந்து, பஜாருக்குப் போனான். காய்கறிக்காரக் கன்னியப்பன் கடைக்குள் நுழைந்தான். இரும்புக் குண்டை இறக்கி வைத்தான்

கடைக்காரன் அங்கில்லை. வெளியில் வியாபாரத்திற்குச் சென்றிருந்தான் அவன் மனைவி அங்கிருந்தாள். ரொம்ப நல்லவள்.

"தம்பி சோமு! இதென்ன? இந்தக் குண்டை எங்கிருந்து சிரமப்பட்டுத் தூக்கி வருகிறாய்'' என்றாள். "நான் பள்ளிக்கூடத்திலிருந்து வீட்டுக்கு வந்தேன். வழியில் இது கிடந்தது. உன் புருஷனுடையதாய் இருக்குமோ என்று நினைத்தேன். சிரமப்பட்டுக் கொண்டு வந்தேன்'' என்றான், அம்பி.

அவள், தன் கடையிலுள்ள படிக்கல்களைச் சரி பார்த்தாள். ஒன்றும் குறையவில்லை. "தம்பி! எங்கள் மணங்குக் கல் சரியாய் இருக்கிறதே'' என்றாள். "தம்பி!'' நீ வெகு தூரத்திலிருந்து இதைத் தூக்கி வர முடியாமல் களைத்து வந்திருக்கிறாய். நான் தோசை செய்து வைத்திருக்கிறேன். உள்ளே வா. இரண்டு தருகிறேன். சாப்பிட்டுப் போ என்றாள். அம்பிக்கு நல்ல பசி. உள்ளே போய் நான்கு தோசை வாங்கித் தின்றான்.

"அம்மா நேரமாய் விட்டது. நான் போக வேண்டும். இந்தப் படிக்கல் யாருடையதாய் இருக்கும்? தெரியுமா?'' என்றான் அம்பி.

"தம்பி! இங்கிருந்து கொஞ்ச தூரத்தில் 'சிலோன் பேக்கரி' ரொட்டிக் கடை இருக்கிறது. அதன் சொந்தக்காரி, தாயாரம்மாள். அவள் தினந்தோறும் ரொட்டிகள் செய்து, தள்ளு வண்டியில் வைத்து, வீதியில் விற்று வருவது வழக்கம். அவள் ரொட்டி விற்று வரும்போது, அந்தப் படிக்கல் கீழே நழுவி விழுந்திருக்கும். அங்கே போய்க் கேள்'' என்று சொன்னாள்.

"ரொம்ப வந்தனம்! அந்த ரொட்டிக் கடையும் தூரமில்லை. எப்படியாவது இதைத் தூக்கிக் கொண்டு போய், அங்கே கொடுத்து வருகிறேன்'' என்று, அம்பி புறப்பட்டான். சிரமப்பட்டு இரும்புக் குண்டையும் தோளில் தூக்கிக் கொண்டான். ஆடி அசைந்து சென்றான். ரொட்டிக் கடைக்குப் போய்ச் சேர்ந்தான். களைப்பு அதிகம். சோர்ந்தான். என்ன செய்வான், பாவம். அவனால் ஒரு மணங்குள்ள பளுவை சுலபமாகத் தூக்க முடியுமா?

'சிலோன் பேக்கரி'யில் வேலையாட்கள் ரொட்டி செய்து கொண்டிருக்கிறார்கள். கோதுமை மாவும், சர்க்கரை டின்களும், ரொட்டித் துண்டுகளும் குவிந்திருந்தன. அவற்றைப் பார்த்தான், அம்பி. அங்கே கடைக்காரி நின்றாள்.

[தொடரும்]

அம்பியின் அதிர்ஷ்டம்

6 பக்கம் தொடர்ச்சி

...ண்டுமானால் கொடுத்துச் செல்... சொல்லுங்கள், செல்லுகிறேன். அவர் வீடு நான் போகும் வழியில்தான் இருக்கிறது" என்றான் சோமு. "அப்படியே செய், தம்பி! என் மகன், தடியன். எங்கோ ஊர் சுற்றப் போயிருப்பான். நானே போய்வருவேன். ஆனால் கடையில் வேறு ஆளில்லை, உன் உதவிக்கு ரொம்ப நன்றி, போய்வா. இந்த வாரம் ஞாயிற்றுக்கிழமை என்னை வந்து பார்க்கத் தவறாதே. அவசியம் வா" என்றான், முதலாளி.

சோமு, தூக்குக் குண்டுடன் சந்தோஷமாய் புறப்பட்டான். எள்ளு வியாபாரியிடம் போனான். அவனிடம் தூக்குக் குண்டைச் சேர்த்தான். அவனோ, சோமுவை, இரும்புக் கடைக்காரன் மகன் என்று தவறுதலாய் நினைத்துக் கொண்டான். ...வதான். அதற்குள் சோமு, "ஐயா! கோபிக்காதீர்கள். இரும்புக் கடை முதலாளியின் மகன் நான் அல்ல. நான் வேறு பையன். ஆள் அகப்படாததால் நான் தூக்கிக்கொண்டு வந்தேன்," என்றான். இதைக் கேட்டதும் எள்ளு வியாபாரிக்குக் கோபம் தணிந்தது. சோமு, சிரமப்பட்டு, தூக்கிக் கொண்டு வந்ததிற்காக அவனிடம் ஒரு ரூபாய், தூக்குக் கூலி கொடுத்தான்.

சோமு, அந்த ரூபாயை வாங்கிக் கொண்டான். வீட்டுக்கு ஓடினான். அம்மாவிடம் ரூபாயைக் கொடுத்தான். நடந்த கதையைச் சொன்னான். தூக்குக் குண்டால் மகனுக்கு வந்த அதிர்ஷ்டத்தை, நினைத்து நினைத்துத் தாய் சந்தோஷமடைந்தாள்.

மறுநாள் சோமு பள்ளிக் கூடத்துக்குப் போனான். ரொட்டிக்காரி கொடுத்த ரொட்டிகளையும் எடுத்துச் சென்றான். தன் கூட்டாளிகள் எல்லோருக்கும் கொடுத்தான். எல்லோரும் சேர்ந்து, ரொட்டிகளை சந்தோஷமாய்த் தின்றார்கள். "இது ஏதடா சோமு, உனக்கு இந்த ரொட்டி?" என்றான், பாலன், "டேய்! நீங்கள் தூக்குக் குண்டை எடுத்துக்கொண்டு போய் உடையவரிடம் சேர்க்க மறுத்து விட்டீர்கள். நான் அதை எடுத்துக் கொண்டு போனேன். அதனால் எனக்கு வேண்டுமட்டும் தோசை கிடைத்தது. ஏராளமாய் ரொட்டி கிடைத்தது. நாம் இப்பொழுது தின்பது, அந்த ரொட்டிதான். லீவு நாட்களில் வேலை தருவதாய் ஒருவர் சொல்லியிருக்கிறார். எங்கள் வீட்டுச் செலவுக்கு ஒரு ரூபாயும் கிடைத்தது. எல்லாம் அந்தத் தூக்குக் குண்டால்தான்" ...நடந்த க... சொன்னான்,

அணில் சங்கம்

8280. டி. தியாகராஜன், கோவை, 81. மா. பழனிசாமி, பல்லடம், 82. ந. சண்முகம், ராயபுரம், 83. வி. மாரிசாமி, குடும்பபாளையம், 84. அ. முகம்மது, சுலைமான், பண்டாரவாடை, 85. மா. பாலசுப்ரமணியன், வத்தலக்குண்டு, 86. சு. சுப்ரமணியன், பரமக்குடி, 87. பா. கஸ்தூரிரங்கன், சென்னை, 88. ரா. சண்முகம், ஆத்தூர், 89. ஆர். சுலோசனா, திருச்சி, 8290. மு. அப்துல் சலாம், கரூர். 91. மா. காந்தா, பணப்பாக்கம், 92. பெ. மாணிக்கவாசகம், கீழ்க்கரை, 93. சு. கண்ணாயிரம், ராமநாதபுரம், 94. த. நீலமேகம், லால்குடி, 95. ந. பரமசிவன், திண்டுக்கல், 96. கோ. சிட்டிபாபு, சென்னை, 97. பெ. விஜயராகவன், ஆம்பூர், 98. மு. கலீலுல்லா, மணியூர், 99. மு. மஹமூதா, கனியூர், 8300. நா. அப்துல் மஜீத், கனியூர். 1. ந. மாணிக்கம், திருப்பத்தூர், 2. சே. நரசிம்மன், புதுக்கோட்டை, 3. சு. சங்கரன், மதுரை, 4. சா. நாராயணசாமி, கும்பகோணம், 5. ஆ. வெ. பாஸ்கரன், ஆனைமலை, 6. பா. பழனி, கோலார், 7. தே. அலக்ஸ் தேவமராஜ், நாகர்கோவில். 8. க. சு. சம்பத்து, அறையூர், 9. கி. கோவிந்தராஜு, கொரட்டூர், 8310. வே. முத்துகிருஷ்ணன், மயிலை, 11. த. ராதா கிருஷ்ணன், சென்னை-2, 12. சு. பத்மநாபன், சென்னை-2, 13. அ. கல்யாணராமன், ராஜபாளையம், 14. ச. சிதம்பரம், தூத்துக்குடி, 15. ரா. பார்த்தசாரதி, சென்னை-17, 16. வே. நடனசபாபதி, சென்னை-1, 17. டானியல், டி. ஆல்பெர்ட், பாளையங்கோட்டை, 18, சு. சிவராம கிருஷ்ணன், ஆர். எஸ். புரம், 19. மா. பிரம்ப ராஜன், கடலூர் என், டி, 8320. க. ராமமூர்த்தி, பெங்களூர் 21. சு. கோவிந்தராஜுலு, மதுரை; 22. ச. பழனியப்பன், ராஜபாளையம், 23. ச. மீனாட்சி சுந்தரம்; தூத்துக்குடி, 24. சு. சிவநாதன், திண்டுக்கல், 26. ஜி, அப்துல் வாகித், சேலம், 27. அ. ரங்கநாதன், திருச்சி, 28. எ. சுப்ரமணியம், சென்னை-12, 29. க. பாலசுப்ரமணி, அய்னாவரம், 8330. என். எம். என். கிருஷ்ணன், கீழ்க்கரை, 31. டி. செல்லம், நாகர்கோவில், 32. வே. பார்த்தசாரதி, சென்னை-22, 33. சு. முத்து லக்ஷிமி, திருநெல்வேலி, 34. ர. அ, ரஹிமத்துல்லா ராவுத்தர், கொடைக்கானல், 35. அ. ஜெகநாதன், ராஜபாளையம், 36. ர. ராமசாமி, காரமடை, 37. கு. ஜெகநாதன், கோவை, 38. அ. சி. தேவதாஸ், கோவை 39. ப. ருக்மணி, கோவை, 8340. கு. தங்கவேலு, வண்ணாரப்பேட்டை, 41. கே. லக்ஷ்மணன், சென்னை—14, 42. க. பாலன், மயிலை, 43. மா. பொன்னுசாமி, கல்லிப்பாளையம், 44. வே. சகாதேவன், உதகமண்டலம, 45. க. வேணு, சக்காரூப்பம், 46. மா. ரங்கராஜு, காரமடை.

அங்கத்தினர் மனு

அணில் சங்கம், சென்னை—14

நான் அணில் சங்க விதிகளுக்குக் கட்டுப்பட்டு அணில் சங்கத்தில் அங்கத்தினராகச் சே...றேன்.

கையெழுத்து..

பெயர்..

தகப்பனார் பெயர்..

வீட்டு நெ., தெரு..

ஊர்..

ஜில்லா..

பெற்றோர் அல்லது முதியோர் கையெழுத்து } ....

22424 ... 600 008

அ. முத்து, அடையாறு

கேள்வி: அண்ணா! கொத்துமல்லி, கறிவேப்பிலை எல்லாம் தாளிக்கும் போது சமையலில் சேர்க்கிறார்களே! எதற்காகச் சேர்க்கிறார்கள்?

பதில்: தம்பி, சமையலில் கொத்துமல்லி கறிவேப்பிலை சேர்ப்பது வாசனையாக இருப்பதற்குச் சேர்க்கிறார்கள். கறிவேப்பிலை, கொத்துமல்லி இரண்டும் உடம்புக்கு ரொம்ப ரொம்ப நல்லது. ஒருநாள் கறிவேப்பிலை, மறு நாள் கொத்துமல்லி, துவையல் அரைக்கச் சொல்லி சாப்பாடு. இவை ருசியாக இருக்கும். கண்ணாடி வேண்டாம், தலை மயிர் வளரும். உடம்பு பள பள வென்று இருக்கும். காலையில் சீக்கிரம் தூக்கம் விட்டு எழும்பலாம், சோம்பல் கிட்டவராது. நன்றாகப் பசிக்கும். கொத்தமல்லி, கறிவேப்பிலையைப் பற்றி அணிலில் கட்டுரைகள் எழுதுகிறேன். படி.

தேவ. பகலவான், நாகை பட்டிணம்

கே: லியோ டால்ஸ்டாய் என்பவர் யார்? அவர் எந்த நாட்டைச் சேர்ந்தவர்? லியோ என்னும் வார்த்தைக்கு அர்த்தம் என்ன?

ப: லியோ என்பது குடும்பப் பெயர். லியோ டால்ஸ்டாய் ருஷ்யா தேசத்துக்காரர். ரொம்பப் படித்தவர். அறிஞர். நிறையப்புத்தகங்கள் எழுதியிருக்கிறார். உலகத்திலேயே உயர்ந்த நாவலான 'போரும் காதலும்' என்ற நூலை அவர் தான் எழுதினார். மகாத்மாகாந்தி அடிகளுக்கு கடிதம் எழுதியிருக்கிறார். காந்தியடிகளின் கொள்கைகளும் டால்ஸ்டாயின் கொள்கைகளும் ஒன்று தான். இவருடைய புத்தகங்கள் தமிழிலும் வெளிவந்திருக்கின்றன. இவருடைய சரித்திரம் அணிலில்வெளிவரும். அவர் யாஸ்னயா போலியானவில் 1828ல் பிறந்தார். அஸ்டாபோலோ என்னும் இடத்தில் 1910 நவம்பர் 21ல் மரணமடைந்தார்.

கே: முதன் முதலில் சூயஸ் கால்வாய் யாரால் வெட்டப் பட்டது?

ப: பெர்ஷிய அரசன் டேரியஸ்ஸால் 4000ம் வருஷங்களுக்குமுன் கட்டப் பட்டது.

எஸ். பழனிசாமி, தேவாரம்

கே: அண்ணாவே என் தம்பி மிருதுவான பல் பொடியினால் பல் தேய்த்தும் அவன் பற்கள் கோணல் மாணலாக இருக்கிறது. முதலில் வரிசையாக இருந்தது. கோணலாக இல்லாமலிருப்பதற்கு என்ன செய்வது?

ப: தம்பி! உன் தம்பிக்குப் பல் விழுந்து முளைக்கும்போது நாக்கால் பல்விழுந்த இடத்தில் துளாவிக்கொண்டிருந்திருப்பான். ஆதலால் தான் பல் கோணலாக முளைத்திருக்கிறது. கோணலை நிமிர்த்த முடியாது. இனி விழுந்து முளைக்கும் பற்கள், கோணலாக இல்லாமலிருக்க வேண்டுமானால் விழுந்த பள்ளத்தில் சேஷ்டை செய்யக்கூடாது.

கே. அண்ணா! சோப்பு செய்ய என்னென்ன பொருள்கள் சேர வேண்டும். இந்த விபரங்களை எழுதி அனுப்புவாயா?

ப: தம்பி! சோப்பு செய்ய தேங்காய் எண்ணெய், கடலை எண்ணெய், காஸ்டிக் சோடா இவைகள் சேருகின்றன. காஸ்டிக் சோடாவை தண்ணீரில், கை படாமல் கரைத்து, எண்ணெயில் ஊற்று. துடுப்பால் கிண்டு அதை அப்படியே வைத்திருந்தால் உறைந்துவிடும். அதுதான் சோப்பு. வியாபார முறையில் செய்யும் விதத்தை தெரிந்து கொள்ள வேண்டுமா? அப்படியானால் உன் ஊருக்குப் பக்கத்திலுள்ள ஏதாவது ஒரு சோப்புச் செய்யும் தொழிற்சாலையைப் பார்த்துவா.

வி. ஆர். வெள்ளையப்பன், சிலோன்.

கே: எனக்கு உள்ளங்காலில் முள் தைத்துப் புத்து வளர்ந்திருக்கிறது. அதற்கு என்ன செய்கிறது?

ப: தம்பி! உடனே ஒரு பெரிய ஆஸ்பத்திரிக்குப் போ. டாக்டரிடம் காலைக் காட்டு. அஜாக்கிரதையாய் இராதே.

ஸ்டாம்புத் திருடன்

பிரெஞ்சு போஸ்டாபீஸ் இன்ஸ்பெக்டர் ஒருவர், பாரிஸில் இருக்கிறார். முத்திரை — குத்திவரும் ஸ்டாம்புகளைச் சேகரிப்பதில் அவருக்கு ரொம்பப் பிரியம். கண்ணைக் கவரக்கூடிய ஸ்டாம்பு எந்தக் கடிதத்தில்ஒட்டியிருந்தாலும் சரி, அதைத் திருடிக் கிழித்து வைத்து விடுவார். ஸ்டாம்பு சேகரிப்பதில் அவருக்கு அவ்வளவு அபார மோகம். இவர் ஸ்டாம்பு திருடுவதை அறிந்து, போலீசார் இவரை அரஸ்ட் செய்து, வீட்டைச் சோதனை போட்டார்கள். பார்த்ததில், அவர் மூன்று கோடி ஸ்டாம்புகள் சேகரித்து வைத்திருந்தாராம்

இந்தியாவில் படிக்கத் தெரியாதவர்கள்.

மாகாணம்	ஜனத்தொகை	விதாசாரம்
சென்னை	4 கோடி 30 லட்சம்	84·7
அஸ்ஸாம்	70 லட்சம்	86·5
ஒரிஸா	80 லட்சம்	87·2
கி. பஞ்சாப்	1 கோடி	84·8
ம. மாகாணம்	1 கோடி 40 லட்சம்	86·6
பம்பாய்	1 கோடி 60 லட்சம்	77·1
மே. வங்காளம்	2 கோடி	81·1
பீஹார்	3 கோடி 20 லட்சம்	89·2
ஐக்கிய மாகாணம்	5 கோடி	80·1

இத்தனை பேர்களும் படிக்க வேண்டாமா? உங்கள் கிராமத்தில் படிக்கத் தெரியாதவர்களுக்கு நீங்கள் படிக்கக் கற்றுக் கொடுப்பீர்களா?

ஆசிரியர்: வை. கோவிந்தன்

சென்னை—2, பாப்பா பிரசில் ஜெ. செல்லையாவால் அச்சிடப் பெற்று, வை. கோவிந்தனால் வெளியிடப்பெறுகிறது.

வருட சந்தா ரூ. மூன்று.
இரண்டு வருடங்களுக்கு ரூ. ஐந்து.

சக்தி காரியாலயம், சென்னை—14